செய்தி வெளியீடு எண் 30 நாள்: 12.01.2017

## திருவள்ளூர் மாவட்டத்தில் 15.01.2017 அன்று திருவள்ளுவர் தினம் மற்றும் 26.01.2017 அன்று குடியரசு தினம் ஆகிய இரு தினங்களில் டாஸ்மாக் கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள் கண்டிப்பாக மூட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் தகவல்

~~~~~

தமிழ்நாடு மதுபான உரிமம் மற்றும் அனுமதி விதிகள் 1981 மற்றும் தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் மதுக்கூடங்கள்) விதிகள் 2003-ன்படி திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கும் IMFS விற்பனை செய்யும் டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள், FL2 (கிளப்புகள்), FL3 (ஹோட்டல்கள்) மற்றும், FL-3AA ஹோட்டல்களில் அமைந்துள்ள மதுக்கூடங்கள் அனைத்தும், 15.01.2017 (ஞாயிற்றுக்கிழமை) அன்று திருவள்ளுவர் தினம் மற்றும் 26.01.2017 (வியாழக்கிழமை) அன்று குடியரசுதினம் ஆகிய இரு தினங்களில் கண்டிப்பாக மூடப்படவேண்டும் என திருவள்ளூர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~